மாவட்ட செயலாளர் ஊடாக
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
மாவட்ட தொழில் நிலையம்
மாவட்ட செயலகம்
………………..

**2021 ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த) முடிவுகளுக்கமைய க.பொ.த (உ/த) ரம் கற்கத் தகுதி பெறாத மாணவர்களின் தொழிற்கல்வி முன்னேற்றத்திற்கான வேலைத்திட்டம் 2023 " Skill Scan Clinic" உங்கள் எதிர்காலத்திற்கு எங்கள் கரம்"**

மேற்படி விடயம் சம்பந்தமாக உங்களுக்கு அனுப்பப்பட்ட இல DMC/04/JCP/5 திகதி 29/12/2022 கடிதம் தொடர்பானது.

02 அதன்படி "Skill Scan Clinic" 2021 ஆம் ஆண்டு க.பொ.த (.சா/த) முடிவுகளுக்கமைய க.பொ.த (உ/த)ரம் கற்கத் தகுதி பெறாத மாணவர்களின் தொழிற்கல்வி முன்னேற்றத்திற்கான வேலைத்திட்டம் 2023 ஜனவரி மாதத்தில் பொது வேலைவாய்ப்பு சேவை மையங்கள் மூலம் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் தொழில் வழிகாட்டல் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

03. பரீட்சையில் தோற்றாலும் ஒவ்வொரு குழந்தையும் தனித்திறமையுடன் இருக்கின்றனர்.மேலும் பல திறன்கள் மற்றும் திறமைகள் அவர்களிடம் இருந்தாலும் அந்த திறன்கள் குழந்தையை எதிர்காலத்தில் மகத்துவமான இடத்திற்கு இட்டுச்செல்லும். இத்தகைய பின்னனியில் வாழ்வின் முக்கியமான தருணங்களில் அவர்களை சரியான திசைக்கு வழிநடத்துவது அவசியம்.

04. எனவே க பொ த (சா/த) தரத்திற்கு தகுதியற்ற மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த நிகழ்ச்சிக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து தினைக்கள உத்தியோதகத்தர்களும் இதில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்கிறோம். விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அனுஷா கோகுல பர்னாந்து
பணிப்பாளர் நாயகம்

**இந்தத் திட்டத்தைக் கையாள்வதில் மாவட்ட பொது வேலை வாய்ப்பு சேவை மையங்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்**

01.“Skill Scan Clinic” 2021 ஆம் ஆண்டு க.பொ.த.சா/த முடிவுகளுக்கமைய க.பொ.த உ/தரம் கற்கத் தகுதி பெறாத மாணவர்களின் தொழிற்கல்வி முன்னேற்றத்திற்கான வேலைத்திட்டம் 2023. அதனை ஜனவரி மாதம் 3ம் திகதி முதல் ஒரு மாதத்திற்கு முன்னுரிமை திட்டமாக செயற்படுத்தப்பட வேண்டும்.மற்றும் அதற்குள் தொடர்பு கொள்ள முடியாத தனியார் விண்ணப்பத்தாரர்கள் 31 மார்ச்சு 2023க்கு முன் தொழில் வழிகாட்டல் திட்டத்திற்கு அனுப்பப்பட வேண்டும். ஆனால் உங்கள் சேவையைப் பெற வரும் பாடசாலை விண்ணப்பதாரர்கள் உட்பட அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இந்த சேவையை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

02. இத்திட்டம் ஜனவரி மாதத்தில் முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்தப்படும் என்பதால் உங்களுடன் தொடர்புடைய விண்ணப்பதாரர்களுக்கான சேவையை வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்ட பொது வேலைவாய்ப்பு சேவை நிலையத்தின் வேலை நேரத்தில் அதாவது காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை உத்தியோகத்தர்கள் அலுவலகத்தில் இருப்பது அவசியம்.

03.அனைத்து வெகுஜன ஊடகங்களும் இந்த திட்டம் பற்றித் தெரிவித்துள்ளன. மேலும் விபரங்களுக்காக தலைமை காரியாலய பொது மக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையத்தின் தொலைபேசி எண் 011-2187407 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.அதன்படி அந்த அலுவலகத்தில பதிவு செய்த பின் தலைமை அலுவலகத்திற்கு தொடர்புகொண்டவர்கள் அனைவரும் உங்கள் மாவட்டத்தின் பொது மக்கள் சேவை வேலைவாய்ப்பு மையத்திற்கு அனுப்பப்படுவார்கள். அத்திட்டத்தில் சேரும் அனைத்து மாணவர்களையும் ஆவணப்படுத்தி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். தொடர்புடைய சேவைகள் ( ஆவணத்தில் மாணவரின் பெயர், முகவரி தேசிய அடையாள அட்டை எண், தொலைபேசி எண், பிரதேச செயலக பிரிவு, மின்னஞ்சல் முகவரி ஆகியவை இருக்க வேண்டும்.

04. உங்கள் மாவட்டத்தில் பொது மக்கள் வேலைவாய்ப்பு சேவை மையங்களின் தொலைபேசி எண்களை ஊடகங்களுக்கு வழற்கியிருப்பதால் உங்களிடமிருந்து சேவை பெற வரும் மாணவர்களுக்கு கண்ணியமாகவும் அன்பாகவும் சேவை செய்ய வேண்டும். மேலும் உங்கள் ஊழியர்களைச் சேர்த்து அலுவலக நேரத்தில் வரும் அனைத்து தொலைபேசி அழைப்புக்களுக்கும் பதிலளிக்க ஒரு அட்டவணையை தயாரிப்பது முக்கியம்.

05 .உங்களிடம் வரும் மாணவர்களின் பதிவினை மேற்கொண்டு தொழில்வழில்காட்டல்களை வழங்க வேண்டும் மற்றும் மாணவர்களுக்கான பொதுவான முக்கிய தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

06. கா பொ த (சா/த) தரத்திற்கு தகுதிபெறாத தனியார் விண்ணப்பதாரர்களின் பெயர்கள் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்மூலம் நீங்கள் மாணவர்களை தொடர்புகொள்ள பயன்படுத்த வேண்டும்.

07. கா பொ த (சா/த) தரத்திற்கு தகுதிபெறாத மாணவர்களுக்கான இத்திட்டம் குறித்து திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட "வீடியோ கிளிப்" Tiltok, Face book post, Posters போன்றவற்றை பயன்படுத்தி மாணவர்களை வழிநடத்த வேண்டும். இளைஞர் அமைப்புக்கள் முதியோர்அமைப்புக்கள் பிற சமூக அமைப்புக்கள் மற்றும் மாவட்ட மற்றும் பிரதேச செயலக அலுவலங்களில் உள்ள சமய பள்ளிகள் மூலம் மாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

08. கா பொ த (சா/த) தரத்திற்கு தகுதிபெறாத மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்தத்திட்டத்திற்கு அனைத்து விடயங்களையும் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் சர்வதேச உறவுகள் பிரிவுப் பணிப்பாளர் shiromalibhc@yaoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். ஏற்பாடுகள் செய்யப்படும் வடிவமைப்புக்களை சரிபார்த்த பின் அவற்றை மறுவிநியோகம் செய்ய வேண்டும்.

09. இந்த திட்டத்தில் பங்கேற்ற அனைத்து மாணவர்களிடமும் நீங்கள் எடுத்த நடைமுறைகள் குறித்து மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளை domejc2023@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

10. இந்த நேரத்தில் தனிப்பட்ட விண்ணப்பதாரர்களை தபால் மூலம் அழைக்க முடியாததென்பதால் சமூக ஊடக வலையமைப்புக்கள். whatsappgroup மற்றும் பிற மின்னணு ஊடகங்கள் மூலம் இவர்களை தொடர்பு கொள்ள வேண்டும். மேலும் மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு தகவல் தெரிவிக்க ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்திங்கு திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இதர கள உத்தியோகத்தர்களின் உதவி பெற முயற்சிக்க வேண்டும்.

11. மேலும் கல்வி அமைச்சின் கீழ் 2023 ஆம் ஆண்டு முதல் கா பொ த உ/ த இல் தோற்றுவதற்கு தகுதி பெறாத மாணவர்களுக்கு அந்த மாணவர்களை தொழில் வழிகாட்டுதலுக்கு பரிந்துரைப்பதற்கான சிறப்பு திட்டத்தில் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஆதரவை வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.